1981 ஏப்ரல் 14]

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இல்லை என்று அமைச்சரவர்கள் பதில் கூறினார்கள். ஆலத்தூர்கேட்டைக்கும் அரியலூர்க்கும் இடையிலே பிளிமச்சைக்கூத்தூர், இலுப்பக்குடி இருக்கிறது. ஆண்டுக்காண்டு மருதையாற்றில் மணல் நூர்ந்து வருகின்ற காரணத்தால் ஆண்டுக்கு பத்தாயிரம் ரூபாய், பதினைந்தாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அந்தப் பகுதியில் இந்த ஆண்டாவது அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த ஆண்டு எந்தப் பகுதித் திட்டத்தின் கீழும் எடுக்கப்படவில்லை ஆகவே, வருகின்ற ஆண்டுகளில் இது பரிசீலிக்கப்படும்.

இளையான்குடி மருத்துவமனைக் கட்டிடம்

*வினா எண் 749—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இளையான் குடியில் கடந்த ஏழு மாதங்களுக்கு முன்னால் ரூ. 3.00 லட்சம் எஸ்டிமேட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட ஆஸ்பத்திரி எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கட்டிட வேலைகள் அனைத்தும் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு மருத்துவமனை ஆரம்பிக்கப்படும்.

(ஆ) திரு. கே. எஸ். மொஹம்மது இஸ்மாயில் என்ற தனி நபர் ஒருவர் ஒரு புதிய, மருத்துவமனை கட்ட இங்கு 5 ஏக்கர் நிலம் கொடுக்க முன்வந்தார். அங்குள்ள மக்கள் அந்த இடம் ஊருக்கு $2\frac{1}{2}$ மைல் தொலைவில் இருக்கிறது என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆகவே அந்த இடத்தில் மருத்துவமனை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது. ஏற்கனவே உள்ள ஊராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்ட வேண்டியிருப்பதால் இக்கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்பப் பணிகள் நடைபெற காலதாமதம் ஏற்பட்டது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு இளையான்குடியில் கட்டிடமானது பூர்த்தியாகும் நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால் மதிப்பிற்குரிய அமைச்சரவர்களுக்குத் தகவல் கொடுத்தவர்கள் எந்த அளவிற்குத்

தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இந்தக் கேள்வி ஆறு மாதங்களுக்கு முன்பு போடப்பட்ட கேள்வி. இப்பொழுது அந்தக் கட்டிடம் பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்களை அதன் திறப்பு விழாவிற்குக் கூப்பிடலாம் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சரியான தகவல் கொடுக்கப்படவில்லை; அந்த அளவிற்கு நிர்வாகம் கோளாறாக இருக்கிறது. அந்தக் கட்டிடம் ஒன்றரை இலட்சம் ரூபாய் அளவிலேதான் பூர்த்தியடையக் கூடிய நிலையில் இருக்கிறது. நான் நேற்று பார்த்தேன். தார்ச்சு முழுவதும் போடப்பட்டு விட்டது. மீதம் உள்ள ஒன்றரை இலட்சம் ரூபாய் உடனடியாகச் செலவு செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலைச் சரியான வகையில் ஆரம்ப எச்சரிக்கையாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனிக்க வில்லை என்று கருதுகிறேன். காலதாமதத்திற்கான காரணத்தை நான் சொன்னேன், இப்பொழுது நடைபெற்று முடியவில்லை என்று நான் சொல்லவில்லை. காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இடத்தை நாம் எடுத்துக்கொள்ள முடியாமல் ஏற்பட்ட சங்கடத்தின் காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டது. காலதாமதம் எதற்காக என்ற கேள்வி எழுப்பப்பட்டதன் காரணமாகத்தான் அதற்கான பதிலைச் சொன்னேன். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கேட்ட துணைக் கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இருக்கிறது. நான் அவைகளையெல்லாம் சொல்ல முடியும் அந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையிலும் திரு. கே.எஸ். முஹமது இஸ்மாயில் அவர்கள் ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அதையும் நாம் எடுத்துக்கொள்கிறோம். Government have sanctioned a sum of Rs. 1·6 lakhs in G. O. Ms. No. 1900, Health. அதைக் கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது 'கன்ஸட்ரக்ஷன் ஒர்க்' எல்லாம் முடிந்துவிட்டது, அடுத்த துணைக் கேள்விக்கு நான் பதில் கொடுத்திருப்பேன். இப்பொழுது தான் அவர்கள் கேட்டார்கள். காலதாமதத்திற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை தயாராகிவிட்டது, விரைவில் துவக்கப்படும். அதில் எந்த விதமான சங்கடமும் வேண்டாம் தவறான தகவலை எந்த அதிகாரியும் கொடுக்கவில்லை. தெளிவாக நான் பதில் சொல்லி உள்ளேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 32 வருடங்களாகக் கேட்டு, கேட்டு, அந்த ஆஸ்பத்திரியானது இப்பொழுதுதான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதோடு, அது தாலுகா தலைநகரத்திலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரி, பிற்பட்ட பகுதியிலிருக்கக்கூடிய ஆஸ்பத்திரி, ஆகவே, அதை மேலும்

விஸ்தரிக்க, பல் வைத்தியப் பிரிவு, எக்ஸ்—ரே பிரிவு போன்ற பிரிவுகளை ஏற்படுத்தும் வகையில் விஸ்தரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், பல ஆண்டுகளாக, கேட்டு, கேட்டு பெறப்பட்ட ஆஸ்பத்திரி என்று மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியை மறைமுகமாகப் பாராட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது முதலிலே இயங்கட்டும். அதற்குப் பிறகு அங்கு வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்த்து, அக நோயாளிகள்—இன் பேஷன்ட்ஸ்——எண்ணிக்கையைப் பார்த்து, 20 பெட்கள் உள்ளன. அது 100 சதவீதம் யுட்டிலைசேஷன் ஆகிறதா என்பதை யெல்லாம் பார்த்துத்தான், வெவ்வேறு பிரிவுகள் கொண்டு வர நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும். ஆகவே, பிறகு படிப்படியாக எல்லாவிதமான வசதிகளையும் கொண்டு வர முயற்சிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—லிருந்து, 25,000 வரை மக்கள் வசிக்கும் பகுதியில், 5 ஏக்கர் இனாமாகக் கொடுக்கவும், ரூ. 1 இலட்சம் இனாமாகக் கொடுக்கவும் மக்கள் முன் வந்தால், அங்கே 20 பெட் உள்ள ஆஸ்பத்திரி கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். இது ஒரு பொதுக் கேள்வி'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கேள்வி என்றால், தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

மதுராந்தகம் தொகுதியில் காலரா நோய்.

*வினா எண். 750—திரு. எஸ் டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி வையாவூர் பிர்காவில் காலரா பரவியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்கு காலராவில் 1980 ஆம் ஆண்டு இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்கள் குடும்பத்திற்கு அரசு நிவாரணம் ஏதாவது வழங்கியதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இப் பகுதி காலரா நோயினால் பாதிக்கப்படவில்லை. (ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS